# சீர்காழி நகராட்சி



**2019–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20.02.2019 புதன் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரகூட்ட நடவடிக்கை.**

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர் (ம) ஆணையர்
சீர்காழி நகராட்சி.

**பொருள் எண்-1**

சீர்காழி நகராட்சி – பொது சுகாதாரப்பிரிவில் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த கொசு ஒழிப்பு மருந்துகள் பைரத்திரம், அபேட் வாங்குவதற்கு விலைப்புள்ளி கோரியதில் 30.01.2019 அன்று கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் பெயர் | கொடுத்துள்ள விலைப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|
| | | பைத்திரம் எண்ணிக்கை 1 –ன் விலை ரூ | அபேட் எண்ணிக்கை 1 –ன் விலை ரூ |
| 1 | ஞானம் என்பவர் மெண்ட் சர்வீஸ் தஞ்சாவூர் | 1485 | 1035 |
| 2 | கிரீன் அகிரோ என்பவர் மெண்ட் சர்வீஸ் தாண்டளம் | 1535 | 1085 |
| 3 | கிரீன் புரூ சானிடாடைன் சர்வீஸ் தஞ்சாவூர் | 1555 | 1125 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 – ல் கண்டுள்ள ஞானம் என்பவர் மெண்ட் சர்வீஸ்,தஞ்சாவூர் என்ற நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டு பணிஆணை வழங்குவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.4054/2018/எச்.1)

**பொருள் எண்-2**

இந்நகராட்சியின் பொது நிதி திட்டம் -2018-2019 ன்கீழ் சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தெருக்களில் குடிநீர் விநியோக குழாய் உடைப்புகளை சரிசெய்யும் பணிக்கு ரூ.5,00,000/- பணி செய்திட 11.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|
| 1 | ஆர். தனராஜ், ஒப்பந்ததாரர், சீர்காழி. | (-) 0.24 % (குறைவு ) |
| 2 | ஆர். கலைவாணன், ஒப்பந்ததாரர், சீர்காழி | (+) 1.74 % ( அதிகம் ) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.தனராஜ் ஒப்பந்ததாரர் ,சீர்காழி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டைவிட (-) 0.24% குறைவாக உள்ளதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| பொருள் எண்-3 | மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகர்ப்புறங்களில் நிலையான குடிநீர் பாதுகாப்பு ஆதார இயக்கம் (SUWaSeM) -2018-19 ன்கீழ் பணி மேற்கொள்ள திட்ட பிரேரணை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் சீர்காழி நகராட்சியில் வார்டு எண்-21 என்.ஜீ.ஜீ.ஓ நகர் முதல் வி.என்.எஸ் நகர் இரண்டாவது குறுக்குத் தெரு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி தேர்வு செய்து ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட பிரேரணை தயார் செய்து நிர்வாக அனுமதிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களுக்கு திட்ட நிதியினை முழுமான்யாக வழங்க வேண்டி அனுப்பி வைக்கப்பட்டது.<br>மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தின்படி மதிப்பீட்டு தொகையில் 50% சதவிகித நிதியினை நகராட்சி பொது நிதியில் இருந்து பங்கு தொகையாக வழங்க ஒப்புதல் மற்றும் தீர்மானம் பெற்று அனுப்பிவைக்க தெரிவிக்கப்பட்டது. மேற்படி பணி மேற்க்கொள்ள இந்நகராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் 50% சதவிகிதத் தொகை ரூ.10.00 இலட்சத்தை செலுத்த இயலாத சூழ்நிலையில்.<br>நிர்வாக பொறியாளர், த.கு.வ.வாரியம், கி.கு.திட்டக்கோட்டம், மயிலாடுதுறை அவர்களின் கடிதத்தின் படி ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள தீர்மானம் நகல் அனுப்பிட கோரி கடிதம் பெறப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சியின் நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு ரூ.10.00 இலட்சத்திற்கு (50% திட்ட நிதியிலும் ரூ.5.00 இலட்சம் மற்றும் 50% இந்நகராட்சி பொது நிதியிலும் ரூ.5.00 இலட்சம்) பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1266/2018/இ1) |
| பொருள் எண்-4 | இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டம் -2018-2019 ன்கீழ் 1 எண்ணிக்கை டாடா ஏ.ஸி.இ (Light Commercial) வாகனம் ரூ.5.60 (இலட்சம் மதிப்பீட்டில்) விநியோகம் செய்யும் பணிக்கு 08.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | M/S Sakthi Auto Motors Limited., Coimbatore. | ரூ.5,60,000.00 | ரூ.6,00,000.00 | (+) 7.14 % (அதிகம் ) |
| 2 | M/S ABT Industries Limited., Coimbatore. | | ரூ.5,59,950.00 | (-) 0.01 % (குறைவு ) |
| 3 | M/S LAKSHMI DIESEL AUTO WORK SHOP, METTUR | | ரூ.5,51,965.00 | (-) 1.43 % (குறைவு ) |
| 4 | M/S Krystal Motors (P) ltd., Selam. | | ரூ.5,52,900.00 | (-) 1.27 % (குறைவு ) |
| 5 | M/S J.V.K Auto Disel, Selam. | | ரூ.5,59,000.00 | (-) 0.18 % (குறைவு ) |

வரப்பெற்றுள்ள ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் M/S LAKSHMI DIESEL AUTO WORK SHOP,METTUR அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டைவிட (-) 1.43 % குறைவாக உள்ளதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர் நோக்கி முன் அனுமதி வழங்கியதற்கும் பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்-1190/2018/இ1)

பொருள் எண்-5

இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டம் -2018-2019 ன்கீழ் 14 எண்ணிக்கை பேட்டரியினால் இயங்கும் (Battery Operated) வாகனம் ரூ.25.20 (இலட்சம் மதிப்பீட்டில்) விநியோகம் செய்யும் பணிக்கு 08.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | M/S Coromandal Agro and Marine Agencies, Chennai-87. | ரூ.25,20,000.00 | ரூ.25,13,000.00 | (-) 0.28 % (குறைவு ) |
| 2 | M/S NEPTUNE AUTO MATION, ERODE. | | ரூ.25,20,000.00 | (-) 0.00 % (குறைவு ) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S Coromandal Agro and Marine Agencies, Chennai-87.அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டைவிட (-) 3.61 % குறைவாக உள்ளதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர் நோக்கி முன் அனுமதி வழங்கியதற்கும் பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்-1190/2018/இ1)

பொருள் எண்-6

சீர்காழி நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் தனியார்மயம் மூலம் கீழ்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை | காலஅளவு |
|---|---|---|---|
| 1 | 10 வார்டுகளில் துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிசெய்தல். | ரூ.33,19,000/- | 20.04.2018 முதல் 31.03.2019 வரை |
| 2 | கலவை உரகிடங்கில் 15 பணியாளர்களை கொண்டு பணிமேற்கொள்ள | ரூ.17,41,000/- | 20.04.2018 முதல் 31.03.2019 வரை |
| 3 | நகராட்சி பள்ளிகளில் துப்புரவு பணி | ரூ.9,25,000/- | 19.04.2018 முதல் 31.03.2019 வரை |
| 4 | கணினி உதவியாளர்கள் வழங்கும் பணி | ரூ.2,10,000/- | 12.04.2018 முதல் 31.03.2019 வரை |
| 5 | கலவை உரத்திடலுக்கு பாதுகாவலர் பணி | ரூ.2,95,650/- | 12.04.2018 முதல் 31.03.2019 வரை |

மேற்குறிப்பிடப்பட்ட 5 பணிகளும் 31.03.2019 வுடன் முடிவடைவதால் புதிய அளவு கோலின்படி பணியாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்ய அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது இதுநாள் வரை அனுமதி பெறப்படாததாலும், தேர்தல் அறிவிக்கும் பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள போதிய அவகாசம் இல்லாத சூழ்நிலை ஏற்படும் பொழுது பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பினை எதிர் நோக்கி கலவை உரத்திடல் பணியினை தவிர்த்து

| | |
|---|---|
| | மீதமுள்ள 4 பணிகளையும் தொடர்ந்து அதே விலை விகிதத்தில் செயல்படுத்திட ஏதுவாக 01.04.2019 முதல் 30.06.2019 வரை 3 மாத கால அவகாசத்திற்கு நீட்டிப்பு செய்திடவும் அல்லது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரு.16,00,000/- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்-342/2019/எச்) |

(ஒம்) . திரு.மு.அஜிதாபர்வின்.B.sc.,

இடம்–சீர்காழி

நாள்–20.02.2019

தனி அலுவலர் மற்றும் ஆணையர்

/உண்மை நகல்/

சீர்காழி நகராட்சி.

ஆணையர்

சீர்காழி நகராட்சி.

# சீர்காழி நகராட்சி



2019–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27.02.2019 புதன் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரகூட்ட நடவடிக்கை.

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர் (ம) ஆணையர்
சீர்காழி நகராட்சி.

**பொருள் எண்-1**

தமிழ்நாடு ஒருங்கினைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 ன் விதி 14ல் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால் கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு வழங்குவதேற்பவும், கட்டண விகிதங்களை மாற்றியமைத்திட ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | கட்டிட விவரம் | 5 ஆண்டுகள் அனுமதி மாலம் | | ஒருமுறை கால நீட்டிப்பு 3 ஆண்டுகளுக்கு | |
|---|---|---|---|---|---|
| | | குடியிருப்பு 1 ச.மீ | குடியிருப்பு அல்லாதது 1 ச.மீ | குடியிருப்பு 1 ச.மீ | குடியிருப்பு அல்லாதது 1 ச.மீ |
| 1 | ஆர்.சி.சி தரை கீழ்தளம் | ரூ.75 | ரூ.100 | ரூ.50 | ரூ.75 |
| 2 | ஆர்.சி.சி தரை தளம் | ரூ.75 | ரூ.100 | ரூ.50 | ரூ.75 |
| 3 | ஆர்.சி.சி முதல் தளம் | ரூ.100 | ரூ.150 | ரூ.75 | ரூ.100 |
| 4 | ஆர்.சி.சி இரண்டாம் தளம் | ரூ.125 | ரூ.175 | ரூ.100 | ரூ.125 |
| 5 | ஆர்.சி.சி மூன்றாம் தளம் | ரூ.150 | ரூ.200 | ரூ.125 | ரூ.150 |

அ) கட்டிடத்திற்கு வெளியே கட்டப்படும் கூடுதல் கழிவறை / குளியலறை ஒன்றிற்கு. - ரூ.50 – ரூ.150

ஆ) A.C.C ஷீட் கட்டிடம் 1 ச.மீ (ஓட்டு வீடு) – ரூ.50 – ரூ.25

இ) சுற்று சுவர் கட்ட 1 ச.மீ – ரூ.25 – ரூ.15

ஈ) கூடுதல் நகல் கட்டணம் – ரூ.100

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம்.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கின் 05.03.2019 தேதிய ந.க.எண்-31159/2018/டிபி3 கட்டண விகிதங்களை திருத்தியமைத்து நடைமுறைபடுத்திட அறிவுறுத்தபட்டுள்ளவாரு திருத்திய கட்டண விகிதங்களை தினசரி செய்திதாள் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திடவும் அதற்கான செலவினங்கள் நகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.709/2019/எப்.1)

(ஒம்) . திரு.மு.அஜிதாபர்வின்.B.sc.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–27.02.2019

ஆணையர்
சீர்காழி நகராட்சி.